Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC . No. 703/2025
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS – 1

| | | | |
|---|---|---|---|
| Name: | குபேந்திரன் | Calling: | தலைமை காவலர் 385 |
| Husband's Name: | முருகேசன் | Religion: | |
| Village: | ரெட்டிதோப்பு | Age: | 39 |
| Taluk: | ஆம்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 06.06.2026 நேரம் : 12.27 PM

(எதிரி ஆஜர்)

அ.சா.1 முதன்மை விசாரணை.

நான் தற்போது வாணியம்பாடி மதுவிலக்கு அமலாக்க காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 25.08.2025 ம் தேதி மதுவிலக்கு அமலாக்கபிரிவில் பணியில் இருக்கும் போது நானும் என்னுடன் தலைமை காவலர் 400 திரு.விஷ்ணு என்பவரும் உதவி ஆய்வாளர் திரு. மணிகண்டன் ஆகியோர் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து சென்ற போது மதனாஞ்சேரியில் நடராஜன் என்ற எதிரி வீட்டிடம் கிரேப் ஹவுஸ் சுப்ரீம் பிராந்தி என்ற கர்நாடக மதுவை விற்பதாக தகவல் தெரிந்தது. அதனால் எதிரி வீட்டினை சோதனை செய்த போது அங்கு 180 ML அளவு கொண்ட கிரேப் ஹவுஸ் சுப்ரீம் பிராந்தி ஏழு டப்பாக்கள் இருந்தது. அங்கிருந்த ஏழு பாட்டில்களையும் நானும் தலைமை காவலர் 400 வும் உதவி ஆய்வாளரும் கைப்பற்றுதல் மகரில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தோம். கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. **கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்பு எதிரியுடன் நிலையம் ஆஜராகி வழக்கு பதிவு

செய்தோம். அந்த ஏழு பாட்டில்கள் என்னால் அடையாளம் காட்ட இயலும். இன்று என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் ஏழு டப்பாக்கள் தான் அது. **அது சா.பொ.1 ( எண்ணிக்கை 7) ஆக குறியீடு செய்யப்படுகிறது.** உதவி ஆய்வாளர் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

நான் முதன்மை விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளை தான் புலன் விசாரணை அதிகாரியின் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மது சம்மந்தமான ரோந்துக்கு நானும் உதவி ஆய்வாளர், தலைமை காவலர் காவல் நிலையத்தில் இருந்து எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் 09.00 மணிக்கு சென்றோம். நாங்கள் பார்க்கும் போது எதிரியின் கையில் எந்த வழக்கு சொத்தும் இல்லை என்றால் கையில் இல்லை, வீட்டிடம் இருந்தது. சம்பவயிடத்திற்கு சென்றோமா என்றால் சென்றோம். எதிரியின் வீடு என்ன வீடு என்றால் மேல்டிங் வீடு. எத்தனை வீடு இருந்தது என்றால் மோல்டிங் ஒரு வீடு, அவர் வீட்டிடம் சீட் வீடு ஒன்று இருந்தது. அது எதிரியின் வீடா என தெரியவில்லை. எதிரியை முதலில் யார் பிடித்தது என்றால் நாங்கள் மூன்று பேரும் தான் ஒன்றாக பிடித்தோம். எதிரியை பிடிக்கும் போது சிமென்ட் சீட் வீடு யாருடையது என விசாரித்து தெரிந்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். எதிரியின் வீடு சுமார் 60 அடி நீளம், 30 அடி அளவுக்கொண்ட வீடா என்றால் வீட்டின் அளவு தெரியாது. ஆனால் மாடிவீடு. அந்த மாடி வீட்டில் மாடிபடி, சமையல் அறை, குளியல் அறை அனைத்தும் உள்ளதா என்றால் உள்ளது. வீட்டின் எந்த இடத்தில் அந்த ஏழு டப்பா இருந்தது என்றால் அவர் வீட்டிடம் உள்ள வாழை மரத்திற்கு அடியில் இருந்தது. அந்த ஏழு டப்பாக்களும் வாழை மரத்திற்கு அடியில் இருந்தது குறித்து உதவி ஆய்வாளர் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் அவரும் உடன் இருந்தார். மேற்படி விவரத்தை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றிய இடம் வாழை மரத்திற்கு அடியில் என குறிப்பிட்டு இருந்த கைப்பற்றுதல் மகசரில் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் சம்பவயிடம் போகவில்லை என்றாலும் எதிரியிடம் இருந்து எவ்வித வழக்கு சொத்தையும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. புலன் விசாரணை அதிகாரி புள்ளியல் விவரத்திற்காக போடப்பட்ட வழக்கிற்காக அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்

(ஒம்.) குபேந்திரன்

SRIPATHI K

SRIPATHI K
2026.06.06
17:53:27
+0530

Deposition of Witness

(Chapter XXV BNSS )

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. CC . No. 703/2025

DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS – 2

| | | | |
|---|---|---|---|
| Name: | விஷ்ணுகுமார் | Calling: | தலைமை காவலர் 400 |
| Husband's Name: | செல்வம் | Religion: | |
| Village: | அண்ணாநகர்,<br>மல்லகுண்டா | Age: | 39 |
| Taluk: | நாட்றம்பள்ளி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 06.06.2026 நேரம் : 12.45 PM

(எதிரி ஆஜர்)

அ.சா.1 முதன்மை விசாரணை.

நான் தற்போது திருப்பத்தூர் கிராமிய காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 25.08.2025 ம் தேதி மதுவிலக்கு அமலாக்கபிரிவில் பணியில் இருக்கும் போது நானும் என்னுடன் தலைமை காவலர் 385 திரு. குபேந்திரன் என்பவரும் உதவி ஆய்வாளர் திரு. மணிகண்டன் ஆகியோர் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து சென்ற போது மதனாஞ்சேரியில் நடராஜன் என்ற எதிரி வீட்டிடம் தேடும் போது சுப்ரிம் பிராந்தி 180 ML அளவுக்கொண்ட ஏழு பவுச் இருந்தது. எதிரியை 09.15 மணிக்கு கைது செய்து அங்கிருந்த வழக்கு சொத்தை 09.30 மணிக்கு கைப்பற்றி பிறது காவல் நிலையம் வந்தோம். கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. **கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது**. உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் முதன்மை சாட்சியத்தில் கைப்பற்றியதாக சொன்ன ஏழு பவுச் கொண்ட கைப்பற்றுதல் மகசரில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நடராஜன் வீட்டில் எந்த இடத்தில் இருந்து அந்த ஏழு பவுச்களை நான் கைப்பற்றியதாக என்னால் சொல்லமுடியுமா என்றால் வாழை மரத்திற்கு அடியில் இருந்து கைப்பற்றினோம். எதிரி வீட்டிடம் வாழை மரம் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. நான் சம்பவம் இடம் செல்லவில்லை என்றாலும் எதிரியை பார்க்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. நான் வாணியம்பாடி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் எழுத்தராக தான் பணிபுரிந்தேன் என்றால் இல்லை. நான் எழுத்தராக தான் பணிபுரிந்தேன் என்றாலும் சம்பவயிடத்திற்கு நான் செல்லவில்லை என்றாலும் உதவி ஆய்வாளர் போட்ட புள்ளியல் வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) விஷ்ணுகுமார்

SRIPATHI K

SRIPATHI K
2026.06.06
17:53:32
+0530